**சாட்சிய வாக்குமூலம்**

# மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தென்காசி.

## OS. No. 279/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வா.சா | : | 2 | நாள் | : | 10.02.2026 |
| பெயர் | : | பாலமுருகன் | ஜாதி | : | |
| தந்தை பெயர்/ | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10th day of February 2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். இன்று முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். 13.12.2024 ம் தேதி நானும், என் தாயார் செல்வியும், பால்ராஜ் என்பவர் வீட்டிற்கு சென்றோம். பால்ராஜிடம் என் மாமா கொடுத்து வைத்த என் தாத்தா, பாட்டியின் நகைகள் எங்கே என்று கேட்டோம். அவர் அதை அடைமானம் வைத்திருப்பதாகவும் பின்னர் அதை அடைமானம் மீட்டு பின்னர் மீண்டும் பலவேசம், சங்கரன், கருப்பையா என்ற மூன்று மாமாக்களிடமும் ஒப்படைத்ததாக சொன்னார். என்னுடைய அலைபேசியில் அதை வீடியோவாக நான் பதிவு செய்தேன். அதை ஒரு பெண்டிரைவில் மாற்றி ஒப்படைத்துள்ளேன். அது சான்று பொருள் 1 ஆகும். அதற்கு நான் வழங்கிய பிரிவு 63 ன் படியான சான்று சா.சா.ஆ.1 ஆகும்.

**பிரதிவாதி தரப்பில் மேற்படி அசல் செல்போன் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் அது யாருக்கு சொந்தமானது என்று ஆவணங்கள் இல்லை என்றும் அசலுக்கு சரியான நகல் என்பது உறுதியூட்டப்படவில்லை என்றும் ஆட்சேபிக்கப்பட்டது. ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.10 17:14:30 +0530